# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2269/7 - 2022 පෙබරවාරි මස 28 වැනි සඳුදා - 2022.02.28

*2269/7 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆகிய என்னால் (393 ஆம் அத்தியாயமான) விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய 2021, பெப்புருவரி மாதம் 24 ஆந் திகதிய 2216/ 14 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவித்தலின்மூலம் 2021 பெப்புருவரி மாதம் 24 ஆம் திகதி தாபிக்கப்பட்ட "இலங்கைச் சுங்கம் தொடர்பாகச் சுமத்தப்படும் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் மற்றும் நிகழ்ந்திருக்குமெனக் கருதப்படும் ஊழல் செயற்பாடுகள் மற்றும் முறைகேடுகள் தொடர்பாகப் புலனாய்வு செய்தல், விசாரணை செய்தல் மற்றும் அறிக்கையிடுவதற்கான சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின்" தற்காலப் பணிகளை நிறைவேற்றி அதன் இறுதி அறிக்கையைச் சமர்ப்பிக்கவேண்டிய 2021, மே மாதம் 30 ஆம் திகதி முடிவுறும் காலமானது, சொல்லப்பட்ட சட்டத்தின் 4 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, 2021, மே மாதம் 29 ஆந் திகதிய 2229/ 10 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவித்தலின்மூலம் 2021, மே மாதம் 30 ஆந் திகதியிலிருந்து ஐந்து மாதங்களினால், அதாவது 2021, ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதிவரை மீண்டுமொருமுறை சொல்லப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் 2021, ஒற்றோபர் மாதம் 29 ஆந் திகதிய 2251/ 49 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவித்தலின்மூலம் 2022, பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதிவரையும் நீடிக்கப்பட்டதுடன், மீண்டுமொருமுறை சொல்லப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு 2022, மாச்சு மாதம் 31 ஆந் திகதிவரை இத்தால் நீடிக்கின்றேன்.

**கோட்டாபய ராஜபக்ஷ,**
சனாதிபதி.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு,
2021, ஒற்றோபர் 28.

EOG *03 - 0747*


1A - G 36272 — 370 (2022/03) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*